**மாகாணத் திறைசேரி – வடமாகாணம்**

**Provincial Treasury – Northern Province**

**පළාත් භාණ්ඩාගාරය - උතුරු පළාත**

---

எனது இலக்கம்: NP/9/FRM/2008 16.01.2008.

மாகாணத்திறைசேரி சுற்றுநிருப இலக்கம்: **PT/3/2008**

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வடமாகாணம்.

<u>2008ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டப் பிரேரணைக்கு அமைய</u>
<u>மாகாண அரசாங்க ஊழியர்களுக்கு வாழ்க்கைச் செலவுப்படி செலுத்துதல்.</u>

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம்: 02/2008 இன் மீது தங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

2) 2008.01.01ஆம் திகதி தொடக்கம் மாதம் ஒன்றிற்கு ரூபா.2,500/= ஆகவும், 2008.07.01ஆம் திகதி தொடக்கம் மாதம் ஒன்றிற்கு ரூபா.2,875/= ஆகவும் திருத்தப்பட்ட படியொன்றை செலுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

3) நாட்சம்பளம் பெறும் மாகாணசபை ஊழியர்களுக்கு 2008.01.01ஆம் திகதி தொடக்கம் **சேவையாற்றும் நாளொன்றுக்கு** ரூபா.83.33 எனும் படி மாதம் ஒன்றிற்கு ரூபா.2500/= எனும் ஆகக்கூடிய வரையறைக்கு உட்பட்டும் 2008.07.01ஆம் திகதி தொடக்கம் நாளொன்றிற்கு ரூபா 95.83 எனும் படி மாதம் ஒன்றிற்கு ரூபா.2,875/= எனும் ஆகக்கூடிய வரையறைக்கு உட்பட்டும் வழங்கப்படுதல் வேண்டும்.

4) எனவே 2007.07.17ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 17/2007 இன் பிரகாரம் இதுவரை வழங்கப்பட்ட படி 2008.01.01 இன் பின் வழங்கப்பட மாட்டாது.

5) மேற்படி வாழ்க்கைச்செலவுப் படியை 2008 தைமாத சம்பளத்துடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவும்.

**ஆ. செல்லத்துரை,**
பிரதிப் பிரதம செயலாளர் – நிதி,
பிரதம செயலாளருக்காக.

பிரதி: 1. கௌரவ ஆளுநரின் செயலாளர், வட மாகாணம்
2. கணக்காய்வாளர் நாயகம்
3. பணிப்பாளர், மாகாணக் கணக்காய்வு, வட மாகாணம்
} தகவலுக்காக

Kanniya Road, Varothaya Nagar, Trincomalee.
Phone No. DCS(F) Direct 060-2264892 Fax - 026 – 2226953 General No – 060 – 2266503
E-Mail – nptreasury@sltnet.lk